பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
30 08 2024 **FRIDAY 7.15 AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி மகாராஷ்ட்ர மாநிலத்தில் இன்று பயணம் மேற்கொண்டு பல்வேறு திட்டப்பணிகளை தொடங்கி வைக்கிறார்.
- இங்கிலாந்தின் சௌதாம்டன் பல்கலைக் கழகம் இந்தியாவில் வளாகத்தை அமைப்பதற்கான ஒப்புதல் கடிதத்தை வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் வழங்கினார்.
- ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவை முதற்கட்ட தேர்தல் நடைபெறவுள்ள 24 தொகுதிகளில் வேட்புமனுக்களை விலக்கிக் கொள்ள இன்று கடைசி நாளாகும்
- தமிழகத்தில் அமெரிக்க தொழில் நிறுவனங்களை அமைப்பதற்கான பல்வேறு ஒப்பந்தங்கள் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது.
- அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா - ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>><<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி மகாராஷ்ட்ர மாநிலத்தில் இன்று பயணம் மேற்கொள்கிறார்.

மும்பையில் நடைபெறவுள்ள உலகளாவிய Fintech விழாவில் அவர் பங்கேற்று பேசுகிறார்.

அதைத்தொடர்ந்து Palghar-ல் உள்ள சிட்கோ மைதானத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில், 76 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வாத்வான் துறைமுக திட்டத்திற்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

நாடுமுழுவதும் ஆயிரத்து 560 கோடி ரூபாய் மதிப்பிலான 218 மீன்வளத் திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கவுள்ளார்.

இதனால் மீன்வளத்துறையில் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பின்னர் 360 கோடி ரூபாய் செலவில் தேசிய கப்பல் தகவல் தொடர்பு மற்றும் ஆதரவு அமைப்பை பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

இத்திட்டத்தின் கீழ் 13 கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள மீன்பிடி விசைப்படகுகளில் ஒரு லட்சம் டிரான்பான்டர்கள் பொருத்தப்படும், இது மீனவர்கள் கடலில் இருக்கும் போது தகவல் தொடர்பை ஏற்படுத்த உதவும்.

மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதோடு, மீனவர்களின் பாதுகாப்பையும் இது உறுதி செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

இங்கிலாந்தின் சௌதாம்டன் பல்கலைக் கழகம் இந்தியாவில் வளாகத்தை அமைப்பதற்கான ஒப்புதல் கடிதத்தை வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் வழங்கினார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், நம் நாட்டின் கல்வித்தரத்தை உலக தரத்திற்கு மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதுபோன்ற முயற்சிகள் இளைஞர்களை மேலும் பணியாற்ற தயார்படுத்தும் என்றும், உலகளாவிய ஒத்துழைப்பு உணர்வை வளர்க்கும் என்றும் அவர் கூறினார்.

சௌதாம்டன் பல்கலைக் கழகத்தின் வளாகம் இந்தியாவில் அமைக்கப்படவுள்ளது குறித்து கருத்து தெரிவித்துள்ள மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், தேசிய கல்விக் கொள்கையின்படி உள்நாட்டில் சர்வதேசமயமாக்கல் என்ற இலக்கை அடைவதற்கான முன்னோக்கிய நடைமுறை இது என்று குறிப்பிட்டுள்ளார்.

உலகின் மற்ற கல்வி நிறுவனங்களும் இந்தியாவில் வளாகங்களை அமைக்க முன்வருமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>><<<<

ஓய்வுபெற்ற விளையாட்டு வீரர்களுக்கான அதிகாரமளித்தல் பயிற்சி திட்டத்தை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தொடங்கி வைத்தார்.

புதுதில்லியில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டிற்கு பெருமை சேர்த்த ஓய்வு பெற்ற விளையாட்டு வீரர்களை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம் என்று கூறினார்.

அவர்களின் அனுபவம், இளம் விளையாட்டு வீரர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்று அவர் தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற விளையாட்டு வீரர்களுக்கு அனைத்து வழிகளிலும் ஆதரவு அளிக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

>>>><<<<

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவை முதற்கட்ட தேர்தல் நடைபெறவுள்ள 24 தொகுதிகளில் வேட்புமனுக்களை விலக்கிக் கொள்ள இன்று கடைசி நாளாகும்.

வாக்குப்பதிவு அடுத்த மாதம் 18ஆம் தேதி நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கை அக்டோபர் 4ஆம் தேதி நடைபெறவுள்ளது.

>>>><<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், வடகிழக்கு பிராந்தியம் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

குவஹாத்தியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வடகிழக்கு பிராந்தியங்களின் வளர்ச்சிக்கு பிரதமர் முன்னுரிமை அளிப்பதாக கூறினார்.

தமது பயணத்தின் போது தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சக நடவடிக்கைகள் குறித்து உயரதிகாரிகளுடன் திரு. எல். முருகன் ஆய்வு மேற்கொண்டார்.

>>>><<<<

சென்னையில் ஃபார்முலா-4 கார் பந்தயத்தை நடத்த சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இதுகுறித்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி கிருஷ்ணகுமார், நீதிபதி பாலாஜி ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்தப் பந்தயத்தினால் போக்குவரத்துக்கு எந்த இடையூறும் இல்லாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று தமிழக அரசுக்கு உத்தரவிட்டது.

அப்போது பொதுமக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று தமிழக அரசின் சார்பில் உறுதி அளிக்கப்பட்டது.

இதற்கிடையே, கார் பந்தயம் நடைபெறும் சென்னை தீவுத்திடல் மைதானத்தை சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை அறிவித்துள்ளது.

இன்று முதல் நாளை மறுநாள் வரை இந்த போக்குவரத்து மாற்றங்கள் அமலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

மனித வளங்கள் மற்றும் திறன்கள் மூலம் வளர்ச்சியை மேற்கொண்டு வரும் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் அவர் பங்கேற்றுப் பேசினார்.

இந்தியாவில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் சுமார் 20 சதவீத கல்வி நிறுவனங்களில் தமிழகத்தில் உள்ளதாக கூறினார்.

நாட்டில் பணிபுரியும் பெண்களில் சுமார் 45 சதவீதம் பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவர் தெரிவித்தார்.

300க்கு மேற்பட்ட அமெரிக்க நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்கள் திட்டங்களை நிறுவியுள்ளதாக திரு.மு.க.ஸ்டாலின் கூறினார்.

இந்த முதலீட்டாளர் மாநாட்டின் போது, முதலமைச்சர் முன்னிலையில் பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

மதுரையில் புதிதாக தொழில்நுட்ப மையம் அமைக்க இன்ஃபின்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை தரமணியில் செமிகண்டர் உற்பத்தி தொழிற்சாலை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

**>>>><<<<**

கொல்கத்தாவில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பெண் பயிற்சி மருத்துவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட இரண்டு பாதுகாப்பு பணியாளர்களிடம் சிபிஐ உண்மை கண்டறியும் சோதனை நடத்தியது.

இதற்கிடையே, கொல்கத்தாவைச் சேர்ந்த காவல்துறை உதவி ஆய்வாளர் **Anup Dutta**–விடம் இச்சோதனையை நடத்த சிபிஐ திட்டமிட்டுள்ளது.

இதற்காக **Sealdah** நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளது.

முன்னதாக, அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் முன்னாள் முதல்வர் டாக்டர் **Sandip Ghosh** உட்பட 7 பேரிடம் சிபிஐ, உண்மை கண்டறியும் சோதனையை நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>><<<<**

பிஜேபியின் மத்திய தேர்தல் குழுக் கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கட்சியின் மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, கட்சித் தலைவர் திரு. ஜெ.பி. நட்டா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஹரியானாவில் நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை இறுதி செய்வது குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>><<<<**

**Y.S.R** காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர்கள் **Beedha Masthan Rao Yadav, Mopidevi Venkataramana** ஆகியோர் தங்கள் பதவியை ராஜினாமா செய்தனர்.

அவர்களது ராஜினாமாவை மாநிலங்களவைத் தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இதன் மூலம், மாநிலங்களவையில் **Y.S.R** காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 9ஆக குறைந்துள்ளது.

மக்களவையில் அக்கட்சிக்கு 4 உறுப்பினர்கள் உள்ளனர்.

**>>>><<<<**

குஜராத்தில் மழை பொழிவு குறைந்ததன் காரணமாக, வெள்ள பாதிப்பு சீரடைந்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஜாம்நகர், துவாரகா ஆகிய பகுதிகளில் அம்மாநில முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல் பார்வையிட்டார்.

வதோதரா, ஜாம்நகர், கட்ச், ராஜ்கோட், போர்பந்தர் உள்ளிட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மீட்புப் பணியில் ராணுவம், தேசிய பேரிடர் மீட்புப் படையினர், தீயணைப்பு குழுவினர் ஆகியோர் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வதோதராவில் பெய்த கனமழையின் காரணமாக, பல்வேறு பகுதிகளில் மின்விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

இது இன்றைக்குள் சீரமைக்கப்பட்டு விடும் என்று குஜராத் மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, சௌராஷ்ட்ரா மற்றும் கட்ச் பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**>>>><<<<**

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட கடலோர காவல்படையின் முதலாவது மாசு கட்டுப்பாட்டு கப்பலான **Samudra Pratap** கோவாவில் சேவையை தொடங்கியது.

பாதுகாப்பு இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் இதனை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய திரு. சஞ்சய் சேத் நாட்டின் பாதுகாப்பு தேவைகளுக்காக கப்பல் கட்டுவதில் தற்சார்பு நாடாக மாறியுள்ளது மட்டுமின்றி பிற நாடுகளுக்காக கப்பல்களை கட்ட தொடங்கியிருப்பது குறித்தும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

**>>>><<<<**

அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா - ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

முதல்சுற்றில் இந்த இணை 6-3, 7-5 என்ற செட்கணக்கில் நெதர்லாந்தின் **Robin Haase – Sander Arends** இணையை வென்றது.

இதற்கிடையே, கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் ரோஹன் போபண்ணா - இந்தோனேஷியாவின் **Aldila Sutjadi** இணை இன்று நெதர்லாந்தின் **Demi Schuurs -** ஜெர்மனியின் **Tim Puts** இணையை எதிர்கொள்கிறது.

**>>>><<<<**

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியின் வில்வித்தை கலப்புக்குழு பிரிவில் இந்தியாவின் ஷீத்தல் தேவி – ராகேஷ்குமார் இணை காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற போட்டியில் இந்த இணை ஆயிரத்து 399 புள்ளிகளுடன் புதிய பாராலிம்பிக் சாதனை படைத்தது.

இன்று நடைபெறவுள்ள துப்பாக்கிச் சுடுதல் மகளிர் பிரிவில் அவனி லேக்ரா, மோனா அகர்வால் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

**>>>><<<<**

மகளிர் ஆசிய சாம்பியன்ஸ் டிராபி ஹாக்கிப் போட்டி, பீகார் மாநிலம், **Rajgir** -ல் நடைபெறவுள்ளது.

இப்போட்டி, நவம்பர் 11ஆம் தேதி தொடங்கி, 20ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

**>>>><<<<**